Crl.M.P. No. 141/2025          தேதி : 26.12.2025

PW1– P.பாலமுருகன்   த/பெ  பால்சாமி

**சத்தியபிராமாண வாக்குமூலம் :**

நான் டிவி, வாஷிங் மெஷின் சரிசெய்யும் தொழில் செய்து வருகிறேன். எனக்கு எதிரி தொழில் மூலம் பழக்கமானார். எனது காதணி விழாவிற்கு வந்த எதிரியானவர் அவரது சொந்த ஊரான சிவகாசியில் இடம் குறைந்த விலையில் விற்பனைக்கு வருவதாகவும், மேற்படி இடத்தை எதிரி வாங்குவதற்கு ரூபாய் 9,00,000/– ம் தேவைப்படுவதாகவும், என்னிடம் மொய் வைத்த பணத்தை கடனாக கொடுக்க வேண்டியும் அவற்றிற்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100க்கு 1.5 % ம் வட்டி கொடுத்துவிடுவதாகவும் கூறினார். மேலும் அசல் தொகையை இடத்தை வேறு நபர்களுக்கு மறு கிரையம் செய்யும் போது திருப்பி தருவதாகவும் உறுதியளித்ததாகவும், கடந்த 11.05.2024ம் தேதி பத்திரபதிவிற்காக சாத்தூர் செல்லும் போது பணத்தை பெற்றுக்கொள்வதாக கூறியதாகவும், மேலும் இரண்டொரு நாள்கள் கழித்து எதிரி மேலும் கூடுதலாக ரூபாய் 500000/– ம் பணம் தேவைப்படுவதாக என்னிடம் கூறினார். கடந்த 11.05.2024ம் தேதி எதிரி எனது வீட்டில் வந்து மேற்படி தொகையை ரொக்கமாக பெற்றுக்கொண்டார். அதன்பின்பு அன்றைய தினமே எனது நண்பர் அமாவாசை வீட்டிற்கு சென்று ரூபாய் 500000/–யையும் ரொக்கமாக பெற்றுக்கொண்டார். மேற்படி தொகைக்கு ஆதரவாக பத்திரபதிவு எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை. மேற்படி தொகைக்கு எதிரி வட்டி தொகை எதுவும் செலுத்தவில்லை. அதனை கேட்டபோது எதிரி வாங்கிய நிலத்திற்கு அரசு அனுமதி பெறவேண்டும் என்றும், அதனை ஏற்பாடு செய்து இடத்தை கிரையம் செய்துவிட்டு பின்னர் அசலையும் வட்டியும் தருவதாக கூறி எதிரி ஒருவருடமாக காலதாமதம் செய்து வந்ததாகவும், கடந்த 07.07.2025ம் தேதி நான் கொடுத்த 900000/– த்தை திருப்பி கேட்டேன் என்றும், அதற்கு எதிரி 05.08.2025ம் தேதி பத்திரபதிவு குறித்துள்ளதால் பத்திரப் பதிவு முடிந்தவுடன் பணத்தை திருப்பி தருவதாக கூறினார் என்றும்,

06.08.2025ம் தேதியோ அல்லது ஒரு வாரத்திற்குள் பணத்தை திருப்பி தருவதாக கூறி அதற்கு ஆதரவாக எதிரி கணக்கு வைத்துள்ள திருப்பூர், இந்திரா நகர் கிளை, எச்.டி.எஃப் சி வங்கியின் காசோலை எண் 000216 கொண்ட காசோலையை ரூபாய் 900000/- முக மதிப்பிட்டும், 06.08.2025ம் தேதியிட்டும் என்னிடம் எதிரி கொடுத்ததாகவும், கடந்த 06.08.2025ம் தேதி எதிரி என்னை தொடர்பு கொண்டு காசோலையை ஒரு வாரம் கழித்து 13.08.2025ம் தேதி வசூலுக்கு போடச் சொன்னார். எதிரியின் அறிவுறுத்தலின் பேரில் கடந்த 14.08.2025ம் தேதி எனது வங்கியான கனரா வங்கியில் மேற்படி காசோலையை வசூலுக்கு செலுத்தினேன். ஆனால் கடந்த 16.08.2025ம் தேதி தாவா காசோலையானது வங்கியால் கணக்கு முடிக்கப்பட்டுவிட்டது என்று மேற்குறிப்புடன் வங்கி திருப்புதல் குறிப்பாணையானது வரப்பெற்றது. இதனை குறித்து நான் எதிரியிடம் கேட்க முயற்சி செய்த போது எதிரியை தொடர்பு கொள்ள என்னால் முடியவில்லை. எனது விசேஷத்தின் மூலம் நான் வைத்திருந்த பணத்தை அறிந்துகொண்ட எதிரியானவர் என்னிடம் இருந்து பணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் என்னிடமிருந்து பணத்தை பெற்றுள்ளார். மேலும் ஏற்கனவே வங்கி கணக்கு முடிக்கப்பட்ட வங்கியின் காசோலையை என்னிடம் கொடுத்து மோசடி செய்துள்ளார் என்பதை அறிந்த நான் கடந்த 22.08.2025ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரிக்கு அனுப்பினேன். அந்த அறிவிப்பை கடந்த 30.08.2025ம் தேதி பெற்றுக்கொண்ட எதிரி தற்போது வரை எனக்கு எந்த பதிலறிவிப்பு அனுப்பாமல் இருந்துவருகிறார். எனவே எதிரியின் மேற்படி மோசடி செயலை அறிந்து எனக்கு மனுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன். கடந்த 06.08.2025ம் தேதியிட்டு வழங்கப்பட்ட திருப்பூர் இந்திரா நகர் எச்டிஎப்சி வங்கி கிளையின் காசோலை எண் 000216 நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.08.2025ம் தேதி வங்கியின் திருப்புதல் குறிப்பாணை **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 22.08.2025ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.08.2025ம் தேதிய அஞ்சல ரசீது

**ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி மேற்படி நோட்டீசை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

S.d. Balamurugan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.